**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டம் - 2019**

---

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 யூலை 31 ஆம் திகதிய கடனகள் மற்றும் மானியங்களிற்கான பொது நிபந்தனைகளின் 4:09(ஆ) பிரிவு மற்றும் 2014 யூலை 10 ஆம் திகதிய 5417-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 2 ஆம் பட்டியலின் II சீ பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் விவசாயம், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் அனர்த்தங்களை செயற்திறனாக எதிர்த்து செயலாற்றுவதற்கான பெறுநர் இயலளவை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,617 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 111.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 14,382 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 ஆகஸ்ட் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் (அ) வடிநில முதலீட்டு திட்டங்களின் அபிவிருத்தி, (ஆ) காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் உட்கட்டமைப்பை அதிகரித்தல், (இ) செயற்திட்ட அமுலாக்கம் மற்றும் (ஈ) எதிர்பாராத அவசர நிலைமைக்கு பதிலளித்தல் ஆகிய பெயர்களில் 04 பிரதான கூறுகளைக் கொண்டுள்ளது. செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 14,383 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 72.10 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 12,389 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 79.32 மில்லியன் மாத்திரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மிகுதி 08 மாத காலப்பகுதியின் போது 27.89 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,994.05 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 30.68 மில்லியன் மிகுதித் தொகையை பயன்படுத்துவதற்கான சாத்தியத்தன்மை மிகவும் தொலைவானது. இது தொடர்பாக வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட காலப்பகுதியை நீடிப்பதற்கான சாத்தியத்தன்மை மற்றும் கிரய அதிகரிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சுட்டிக்காட்டப்பட்ட மேற்படி கூற்றுடன் செயற்திட்டம் இணங்குகின்றது. எனினும் தற்போது 2020 யூன் 30 தொடக்கம் 6 மாத கால நீடிப்பை செயற்திட்டம் பெற்றிருந்ததுடன் தற்போது செயற்திட்டத்தின் புதிய பூர்த்திசெய்தல் திகதி 2020 திசெம்பர் 31 ஆகும். அத்துடன் அனைத்து விலைப்பட்டியல்களையும் தீர்ப்பனவு செய்வதற்கு இன்னொரு 4 மாத காலப்பகுதி கிடைக்கக்கூடியதாக உள்ளது. ஆகையால் இக் காலப்பகுதியின் போது செயற்திட்டம் பிரச்சனைகள் எதுவுமின்றி மிகுதி நிதிகளை பயன்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்தது. | மேலதிக காலம் மற்றும் கிரயங்களை தவிர்ப்பதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 வரை ஒப்பந்ததாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 12,821.7 மில்லியன் பெறுமதியான 516 ஒப்பந்த வேலைப் பொதிகளில் ரூபா 1,540.7 மில்லியன் பெறுமதியான 30 ஒப்பந்த வேலைப் பொதிகள் ஒப்பந்த காலப்பகுதியின் போது பூர்த்தி செய்யப்படாமல் | செயற்திட்ட காலப்பகுதியை நீடிப்பதற்கான சாத்தியத்தன்மை மற்றும் கிரய அதிகரிப்புக்கள் | ஒப்பந்ததாரர்களின் மோசமான செயலாற்றல்கள் காரணமாக இவ் வேலைப் பொதிகள் முடிவுறுத்தப்பட்டன. சில ஒப்பந்தங்கள் உரிய கம்பனிகளின் நிதிச் சிக்கல்கள் காரணமாக முடிவுறுத்தப்பட்டன. | மேலதிக காலம் மற்றும் கிரயங்களை தவிர்ப்பதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| காணப்பட்டதுடன் 01 தொடக்கம் 34 மாதங்கள் வரையான வீச்சிலான காலதாமதம் காணப்பட்டது. தாமதங்களிற்கான பிரதான காரணங்கள் மோசமான ஒப்பந்த நிர்வாகம் மற்றும் ஒப்பந்ததாரர்களின் விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதிலுள்ள தாமதங்கள் என்பனவாகும். ஒப்பந்ததாரர்களின் மோசமான செயலாற்றல் மற்றும் ஒப்பந்ததாரர்களின் நிதி இயலளவுகள் தொடர்பான சிக்கல்கள் காரணமாக ரூபா 759.9 மில்லியன் பெறுமதியான 32 ஒப்பந்த வேலைப் பொதிகள் மீளாய்வாண்டின் இறுதியில் முடிவுறுத்தப்பட்டிருந்தன. | | முடிவுறுத்தப்பட்ட மிகுதி ஒப்பந்த வேலையை கவனமாக மதிப்பீடு செய்த பின்னர் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கெல்லையை அடைந்துகொள்வதற்காக பொருத்தமான பெறுகை முறையை பயன்படுத்தி அவை மீள வழங்கப்பட்டுள்ளன. | |

## 2.2 குறைப்பயன்பாட்டு வளங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் மிகுதி காலப்பகுதி ஒரு வருடத்தை விடக் குறைவாக காணப்பட்ட போதிலும் செயற்திட்ட அலுவலகம் கணனிகள், உபபாகங்கள், தளபாடங்களும் பொருத்துக்களும் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவுகளிற்காக ரூபா 14.09 மில்லியன் தொகையை செலவிட்டிருந்தது. | செயற்திட்ட கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியத்தன்மை. | செயற்திட்டத்தால் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 14,085,462 பெறுமதியான நிலையான சொத்துக்கள் (கணனி, உபபாகங்கள் மற்றும் தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்) கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 2,086,864 பெறுமதியான சொத்துக்கள் உரிய ஆவணப்படுத்தல் வேலைகளை துரிதப்படுத்துவதற்காக சீஆர்சீ கூறின் கீழ் காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டச் செயலகங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.<br><br>ஏற்கனவேயுள்ள சீஆர்ஐபி செயற்திட்டத்தின் தொடர்ச்சியான செயற்திட்டமொன்றாக முன்மொழியப்பட்ட புதிய செயற்திட்டம் CRes-MPA 2019 நவம்பர் மாதமளவில் ஆரம்பிக்கப்படுவதற்கு தயார் செய்யப்பட்டு/ வடிவமைக்கப்பட்டு பொறுப்பேற்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பின் அங்கீகாரத்துடன் CRes-MPA இன் தயார்ப்படுத்தல் | செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட சொத்துக்களை பயன்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

நடவடிக்கைகளிற்காக சீஆர்ஜபி நிதிகளை பயன்படுத்துவதற்கான அங்கீகாரத்தை செயற்திட்டம் பெற்றிருந்தது. அதற்கிணங்க சீஆர்ஜபி நிதியளிப்பின் கீழ் CRes-MPA கட்டத்திற்கான கணனிகள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு செயற்திட்டம் தீர்மானித்திருந்தது.

எனினும் நாட்டில் நிலவுகின்ற தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் காரணமாக புதிய செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் தாமதமடைந்து வருகின்றதுடன் தேவைப்பாட்டை இனங்காணல் மற்றும் ஐஏஎஸ் இன் வேண்டுகோள் என்பவற்றின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியில் ரூபா 1,230,000 பெறுமதியான சொத்துக்கள் UVA PRDD இற்கு வழங்கப்பட்டதுடன் ரூபா 410,000 பெறுமதியான சொத்துக்கள் ID இற்கு வழங்கப்பட்டது. அத்துடன் ரூபா 1,962,217 பெறுமதியான சொத்துக்கள் முதலீட்டு வடிநில திட்டத்திற்கு வழங்கப்பட்டது. சீஆர்ஜபி மற்றும் CRes-MPA செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பிஎம்யூ ஆல் ரூபா 8,396,380 பெறுமதியான

சொத்துக்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன.

சீஆர்ஜபி செயற்திட்ட பூர்த்தி செய்தல் திகதி 2020.12.31 வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் ஏற்கனவேயுள்ள செயற்திட்டம் முடிவடைந்த பின்னர் அனைத்து சொத்துக்களும் முன்மொழியப்பட்ட புதிய செயற்திட்டம் CRes-MPA இற்காக எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும்.